நவம்பர்
2019

விண்மீன்.காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

08 நவம்பர் – 14 நவம்பர்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

**1.2019 டாக்கா லிட் விழாவில் விருதுவென்ற அபிசேக் சர்கார், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?**



**A) மேற்கு வங்கம் ☑**

B) மகாராஷ்டிரா

C) பீகார்

D) ஜார்க்கண்ட்

✓ டாக்கா இலக்கிய விழாவின் ஒன்பதாவது பதிப்பில், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர் அபிஷேக் சர்கார் மற்றும் வங்கதேச கவிஞர் ரோபிக்சமான் ரோனி ஆகியோருக்கு 'Gemcon இளம் இலக்கிய விருது'ம் 'Gemcon இளங்கவி விருது'ம் வழங்கப்பட்டன. அபிஷேக் மற்றும் ரோபிக்சமான் ஆகியோர் முறையே தங்களது கையெழுத்துப் பிரதிகளான 'நிஷித்தோ' மற்றும் 'தோஷர் தமதே ரோங்' ஆகியவற்றுக்காக இவ்விருதுகளை வென்றுள்ளனர்.

**2. 100 T20 சர்வதேச போட்டிகளை முடித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**



A) இரவீந்திர ஜடேஜா

B) விராட் கோலி

**C) ரோகித் சர்மா ☑**

D) தினேஷ் கார்த்திக்

✓ வங்கதேசத்துக்கு எதிரான 2ஆவது போட்டியின்போது களமிறங்கிய ரோகித் சர்மா, 100 T20 சர்வதேச போட்டிகளை முடித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரரும் உலக அளவில் இரண்டாவது வீரரும் ஆனார். பாகிஸ்தான் அணியைச்சேர்ந்த ஷோயப் மாலிக் (111 ஆட்டங்கள்) 100 T20க்கும் மேற்பட்ட சர்வதேச போட்டிகளில் விளையாடிய ஒரே வீரராக உள்ளார். ரோகித் சர்மா, முன்னதாக விராட் கோலியின் சாதனையை விஞ்சி T20Iஇல் அதிக இரன்கள் எடுத்தவர் என்ற பெருமையைப்பெற்றார்.

**3.இந்தியாவின் புதிய அரசியல் வரைபடத்தில் காலாபாணி பகுதியை இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த நாடு எது?**




A) பாகிஸ்தான்

B) பூடான்

**C) நேபாளம் ☑**

D) வங்கதேசம்

✓ இந்திய நாட்டின் புதிய அரசியல் வரைபடத்தில், காலாபாணி சேர்க்கப்பட்டுள்ளது இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய பிரச்சனையாக மாறியுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு நேபாள அரசாங்கம் ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளதுடன், காலாபாணி பிரதேசம்

நேபாளத்திற்கு மேற்குக் கோடியில் தொலைவில் அமைந்துள்ளது எனக் கூறியுள்ளது. இந்தியாவின் புதிய அரசியல் வரைபடத்தின்படி, காலாபாணி இந்திய நாட்டின் ஒருபகுதியாக காட்டப்பட்டுள்ளது.

**4.அண்மையில் காலமான நவநீத தேவ் சென், எந்த மொழிசார்ந்த புகழ்பெற்ற கவிஞர்?**



A) ஒடியா

B) மராத்தி

**C) பெங்காலி ☑**

D) தெலுங்கு

✓ பிரபல பெண்ணிய வங்காள எழுத்தாளரும் கவிஞரும் ஆசிரியரும் இலக்கிய விமர்சகருமான நவநீத தேவ் சென் (81), நவம்பர் 7 அன்று கொல்கத்தாவில் காலமானார். 1992ஆம் ஆண்டில், 'மகாதேவி வர்மா' பரிசு, 1999ஆம் ஆண்டில், 'சாகித்ய அகாடமி' விருது, 2000ஆம் ஆண்டில், 'பத்மஸ்ரீ' உட்பட பல கௌரவங்கள் மற்றும் பரிசுகளை அவர் வென்றுள்ளார்.

**5.கோவா கடற்கரையில், 'ReSAREX–19' என்ற பயிற்சியை நடத்திய இந்திய ஆயுதப்படை எது?**

A) இந்திய விமானப்படை

B) இந்திய கடற்படை

C) இந்திய இராணுவம்

**D) இந்திய கடலோர காவல்படை ☑**

✓ இந்திய கடலோர காவல்படையானது கோவா கடற்கரையில், 'ReSAREX–19' என்னும் பெயரில் பிராந்திய அளவிலான தேடல் & மீட்பு பயிலரங்கம் மற்றும் பயிற்சியை நடத்தியது. இந்திய கடலோர காவல்படை என்பது இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாக்கும் மற்றும் கடல்சார் சட்டங்களை அமல்படுத்தும் ஓர் ஆயுதப்படையாகும்.

✓ இந்திய கடலோர காவல்படையின் ஐந்து கப்பல்கள், இரண்டு சேதக் உலங்குவானூர்திகள் ஆகியவை இப்பயிற்சியின்போது பயன்படுத்தப்பட்டன. அதே வேளையில் கோவா மாநில கடல்சார் காவல்துறை, பெங்களூருவில் உள்ள இந்திய மிஷன் கட்டுப்பாட்டு மையம், துறைமுகங்களின் கேப்டன், கோவா மாநில நிர்வாகம், கோவா மருத்துவக்கல்லூரி & கோவாவின் மர்மகோவா துறைமுகம் ஆகியவற்றின் வளங்களும் இதன்சமயம் பயன்படுத்தப்பட்டன.

**6.சேக் கலீபா பின் சையீத் அல் நயான், எந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்?**



A) துர்க்மெனிஸ்தான்

B) ஆப்கானிஸ்தான்

C) கஜகஸ்தான்

**D) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் உயர்மட்ட கவுன்சிலானது, ஐக்கிய அரபு அமீரகத்தின் அரசியலமைப்பின் விதிகளின்படி, நான்காவது ஐந்தாண்டு காலத்திற்கு அதன் தலைவராக சேக் கலீபா பின் சையீத் அல் நயானை மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளது. அவரது தந்தை சேக் சையீத் பின் சுல்தான் அல் நயான் காலமானதையடுத்து 2004 நவ.3இல் முதல்முறையாக அவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**7. எந்தப் பிரபல அறிவியலாளரின் பிறந்தநாளன்று தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது?**

A) சத்யேந்திர நாத் போஸ்

B) C V இராமன்

C) ஹர் கோவிந்த் கோரானா

**D) மேடம் கியூரி ☑**



- ✓ புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் புற்றுநோய்க்கு வழிகோலும் வாழ்க்கை முறையை தவிர்த்தல் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய அளவில் புற்றுநோயின் தாக்கத்தை குறைப்பதை தடுக்கும் தடைகளை நீக்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 7 அன்று இந்தியாவில் தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் (National Cancer Awareness Day) கடைப்பிடிக்கப்படுகிறது.
- ✓ நாட்டில் 2.9 மில்லியன் புற்றுநோயாளிகள் இருப்பதாகவும், ஒவ்வோர் ஆண்டும் 1.1 மில்லியன் புதிய நோயாளிகள் பதிவாவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. புற்றுநோயாளிகளில் மூன்றில் இரண்டு பேர் புற்றுநோயின் தீவிர கட்டத்தில்தான் கண்டறியப்படுகிறார்கள்.

**8. IODAஇன் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்தியர் யார்?**

A) இராஜேஷ் ரெட்டி

**B) வினயா செட்டி ☑**

C) மோகித் குமார்

D) நிதி சர்மா



- ✓ சர்வதேச அமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் (IODA) துணைத்தலைவராக Dr. வினயா செட்டி நியமிக்கப்பட்டுள்ளார். 1986இல் IODA தொடங்கப்பட்டதிலிருந்து இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியராக வினயா செட்டி உள்ளார். 2016ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மையம் (UNCTAD) வழங்கிய மதிப்புமிக்க 'எம்ப்ரெடெக் வுமன் இன் பிசினஸ்' விருது பெற்றவர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

**9. 'சமுத்திர சக்தி–19' என்ற இருதரப்பு கடல்சார் பயிற்சியை எந்த நாட்டுடன் இணைந்து இந்திய கடற்படை நடத்தியது?**



A) வியட்நாம்

B) மலேசியா

**C) இந்தோனேசியா ☑**

D) மாலத்தீவு

✓ அண்மையில், இந்தியாவும் இந்தோனேசியாவும் வங்காள விரிகுடாவில், 'சமுத்திர சக்தி–19' என்னும் இருதரப்பு கடல்சார் பயிற்சியை மேற்கொண்டன. இக்கூட்டுப்பயிற்சிகள் தரைமேல் போர் பயிற்சிகள், வான்பாதுகாப்பு பயிற்சிகள், துப்பாக்கிச்சூடு பயிற்சிகள், உலங்கூர்தி செயல்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. 'கருடா சக்தி' என்பது இந்தியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

**10. கட்டணம் செலுத்துதல் தொடர்புடைய சேவைகளுக்காக எந்த வங்கியுடன் அரசு மின்–சந்தை (GeM) கூட்டுசேர்ந்துள்ளது?**

A) பரோடா வங்கி

B) பாரத ஸ்டேட் வங்கி

**C) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ☑**

D) தேனா வங்கி

✓ கட்டணம் செலுத்துதல் தொடர்புடைய சேவைகளுக்காக சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கியுடன் அரசு மின்–சந்தை (GeM) கூட்டுசேர்ந்துள்ளது. இந்தக் கூட்டணியின் மூலம், GeM கணக்குகள் மூலம் பணப்பரிமாற்றம், மின்–செயல்திறன் வங்கி உத்தரவாதங்கள் மற்றும் தளத்தில் பதிவுசெய்யப்பட்ட பயனர்களுக்கு வருவாய் பணம் வைப்பு உள்ளிட்ட பல சேவைகளை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கியால் வழங்க முடியும்.

✓ கட்டணம் செலுத்துதல் மற்றும் பல்வேறு வங்கி சேவைகளுக்கான ஒருங்கிணைப்பே GeMஇன் முன்னுரிமைகளில் ஒன்றாகும். இதை செயல்படுத்துவதற்காக GeM ஆனது பதினெட்டு பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2022 மகளிர் ஹாக்கி உலகக்கோப்பையின் இணை வழங்குநர்களாக ஸ்பெயினும் எந்த நாடும் தேர்வுசெய்யப்பட்டுள்ளன?**

A) இத்தாலி

B) பிரான்ஸ்

C) போலந்து

**D) நெதர்லாந்து ☑**



✓ 2023ஆம் ஆண்டு ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பையை இந்தியா நடத்தவுள்ளதாக சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் நிர்வாகக்குழு அறிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டு மகளிர் ஹாக்கி உலகக்கோப்பைக் –கான இணை வழங்குநர்களாக ஸ்பெயினும் நெதர்லாந்தும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 2023 ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைப் போட்டிகள் ஜன.13 முதல் 29 வரை நடைபெறும். 2022 மகளிர் உலகக்கோப்பைப் போட்டிகள் ஜூலை 1–17 முதல் நடைபெறும். போட்டிகள் நடைபெறவுள்ள இடங்கள் போட்டிகளை நடத்தும் நாடுகளால் பின்னர் அறிவிக்கப்படும்.

**2. கூகிள் இந்தியாவில் நாட்டு மேலாளராக (Country Manager) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A) சஞ்சய் குப்தா ☑**

B) ஜெய் குமார்

C) அஜய் ஜெயின்

D) ருஷிராஜ் பவார்



✓ கூகிள் இந்தியா தனது புதிய நாட்டு மேலாளராகவும், இந்தியாவுக்கான விற்பனை & செயல்பாடுகளின் துணைத்தலைவராகவும் சஞ்சய் குப்தாவை நியமித்துள்ளது. ஸ்டார் மற்றும் டிஸ்னி இந்தியாவின் முன்னாள் நிர்வாக இயக்குநரான சஞ்சய் குப்தா, இந்திய நாட்டில் இணையச்சுற்றுச்சூழல் அமைப்பை விரிவுபடுத்துவதற்கான கூகிளின் முயற்சிகளுக்கு பங்களிப்பார்.

✓ அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தப்பதவியை ஏற்றுக்கொள்ளும் அவர் குருகிராம், ஹைதராபாத் மற்றும் பெங்களூருவை தளமாகக்கொண்ட அணிகளுடன் நெருக்கமாக பணியாற்றுவார். சீக்வோயா கேபிடல் இந்தியாவில் சேருவதற்காக கூகிளைவிட்டுவெளியேறிய இராஜன் ஆனந்தனை அடுத்து சஞ்சய் குப்தா இப்பதவிக்கு வந்துள்ளார்.

**3. AIIMSஉடன் மரபணு சோதனைக்காக கூட்டிணைந்துள்ள அமெரிக்க பல்கலைக்கழகம் எது?**

A) ஹார்வர்ட் பல்கலைக்கழகம்

B) ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்

**C) மிச்சிகன் பல்கலைக்கழகம் ☑**

D) யேல் பல்கலைக்கழகம்

UNIVERSITY OF MICHIGAN

- ✓ மிச்சிகன் பல்கலையானது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) மற்றும் மணிப்பாலில் அமைந்துள்ள கஸ்தூரிபா மருத்துவக்கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவில் மரபணு பரிசோதனையை விரிவுபடுத்தவுள்ளது. இதற்காக தேசிய சுகாதார நிறுவனம் $2.3 மில்லியன் டாலரை மானியமாக வழங்கியுள்ளது. இந்த மானியம், வளர்ச்சிக்கோளாறுகளுக்கு அடிப்படையாக இருக்கும் மரபணு மாற்றங்களை அடையாளங்கண்டு உறுதிப்படுத்துவதற்கு மிச்சிகன் பல்கலைக்கும் இந்திய மரபியலாளர்களுக்கும் உதவும்.

### 4. நீதி வழங்கல் குறித்த இந்தியாவின் முதல் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?



A) தமிழ்நாடு

**B) மகாராஷ்டிரா ☑**

C) ஹரியானா

D) கேரளா

- ✓ 'இந்திய நீதி வழங்கல் அறிக்கை – 2019'இன்படி, மகாராஷ்டிர மாநிலம் தனது குடிமக்களுக்கு நீதி வழங்குவதில் முதலிடம் வகிக்கிறது. அதைத்தொடர்ந்து கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் உள்ளன. ஏழு சிறிய மாநிலங்களின் பட்டியலில் (தலா ஒரு கோடிக்கும் குறைவான மக்கள்தொகைகொண்ட மாநிலங்கள்) கோவா முதலிடம் வகிக்கிறது. அதைத்தொடர்ந்து சிக்கிம் மற்றும் ஹிமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன. இந்தத் தரவரிசையில் ஜார்கண்ட், பீகார் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் பட்டியலின் கடைநிலையில் உள்ளன.
- ✓ இந்தத் தரவரிசை சமூக நீதி மையம், Common Cause, காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு, DAKSH, TISS–பிரயாஸ் மற்றும் சட்டப்பூர்வ கொள்கைக்கான விதி மையம் ஆகியவற்றுடன் இணைந்து டாடா அறக்கட்டளையால் வெளியிடப்பட்ட 'இந்திய நீதி வழங்கல் அறிக்கை – 2019'இன் ஒருபகுதியாகும்.

### 5. 'No Money for Terror' என்ற மாநாட்டை நடத்திய நகரம் எது?



**A) மெல்போர்ன் ☑**

B) புது தில்லி

C) பாரிஸ்

D) நியூயார்க்

- ✓ ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெறும் 'தீவிரவாதத்திற்கு நிதியுதவி கிடையாது' என்ற அமைச்சர்கள் அளவிலான மாநாட்டில் பங்கேற்கும் 5 உறுப்பினர்கள்கொண்ட இந்தியக் குழுவிற்கு தலைமையேற்று மத்திய உள்துறை இணையமைச்சர் G கிஷன் ரெட்டி சென்றுள்ளார். தேசிய புலனாய்வு முகமையின் தலைமை இயக்குநர் உள்ளிட்ட உயரதிகாரிகளும் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். 65 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- ✓ மாநாட்டில் பேசிய G கிஷன் ரெட்டி, 'தீவிரவாதத்திற்கு நிதியுதவி கிடையாது' என்பது பற்றிய அடுத்த மாநாட்டை 2020ஆம் ஆண்டில் இந்தியா நடத்தவிருப்பதாக அறிவித்தார்.

**6. 2019–2021ஆம் ஆண்டுக்கான இந்தியப் பெருங்கடல் விளிம்பு நாடுகள் சங்கத்தின் (IORA) தலைவராக பொறுப்பேற்றுள்ள நாடு எது?**

A) இஸ்ரேல்

B) இந்தியா

C) தென்னாப்பிரிக்கா

**D) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

✓ இந்தியப் பெருங்கடல் விளிம்புநாடுகள் சங்கத்தின் (IORA) 2019–2021ஆம் ஆண்டுக்கான தலைவராக ஐக்கிய அரபு அமீரகம் (UAE) பொறுப்பேற்றது. IORAஇன் தலைவராக, 19ஆவது IORA அமைச்சர்கள் கூட்டத்தை நவ.7 அன்று அபுதாபியில், "Promoting a Shared Destiny and Path to Prosperity in the Indian Ocean" என்ற கருப்பொருளில் நடத்தியது.

✓ இதற்குமுன், 2017–2019ஆம் ஆண்டைய காலகட்டத்தில் IORAஇன் தலைவராக தென்னாப்பிரிக்கா இருந்தது. வங்கதேசம், இந்தியப்பெருங்கடல் விளிம்புநாடுகள் சங்கத்தின் (IORA) 2019–2021ஆம் ஆண்டுக்கான துணைத்தலைவராக இருக்கும்.

**7. நெருக்கடி நேர மருத்துவம் தொடர்பான 10ஆவது ஆசிய மாநாடு நடைபெற்ற நகரம் எது?**

A) மும்பை

B) சென்னை

C) பெங்களூரு

**D) புது தில்லி ☑**

✓ ஆசியா முழுமைக்குமான ஓர் அவசரகால பராமரிப்புத் திட்டத்தை வகுப்பதற்காக அவசரநிலை மருத்துவத்துக்கான ஆசிய சங்கம் (ASEM) மற்றும் இந்திய அவசரநிலை மருத்துவச் சங்கம் (SEMI) ஆகியவை இணைந்து ஏற்பாடுசெய்த அவசரநிலை மருத்துவம் தொடர்பான பத்தாவது ஆசிய மாநாட்டை இந்திய குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா தொடங்கிவைத்தார். நவ.7–10 வரை இந்த மாநாடு நடந்தது.

**8. இந்தியாவின் முதல் காற்றுமாசு வலைத்தள களஞ்சியமான, "IndAIR"ஐ தொடங்கிய அமைப்பு எது?**

A) BARC

**B) CSIR ☑**

C) DRDO

D) ISRO

✓ "IndAIR" என்னும் இந்தியாவின் முதல் வலைத்தள களஞ்சியத்தை (இந்திய காற்றின் தர வலைத்தள களஞ்சியம்) அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் – தேசிய சுற்றுச்சூழல் பொறியியல்

ஆராய்ச்சி நிறுவனம் (CSIR – NEERI) அறிமுகப்படுத்தியுள்ளது. தில்லி – NCR குறித்து 262 ஆய்வுகள் இந்தக் களஞ்சியத்தில் உள்ளன.

- ✓ ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் கல்வியாளர்கள் வலைத்தள உள்ளடக்கத்தை எளிதில் அணுகக்கூடிய வகையில் காற்றின் தரமான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இணையத்திற்கு முந்தைய காலத்திலிருந்து சுமார் 700 படியெடுக்கப்பட்ட பொருட்களை NEERI காப்பகப்படுத்தியுள்ளது. இந்த 170 அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் தவிர, இந்தியாவில் காற்று மாசுபாடு ஆராய்ச்சி மற்றும் சட்டத்தின் வரலாற்றை வழங்க 1,215 ஆய்வுக்கட்டுரைகள், 100 வழக்குகள் மற்றும் 2000க்கும் மேற்பட்ட சட்டங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**9. சிறப்பு பாதுகாப்பு பிரிவு சட்டமானது (Special Protection Group) இந்திய நாடாளுமன்றத்தால் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?**

A) 1987

B) 1986

**C) 1988 ☑**

D) 1984



- ✓ காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத்தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த SPG என்னும் சிறப்பு பாதுகாப்பு பிரிவை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது. 1985இல் பிரதமர், முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் SPG உருவாக்கப்பட்டது.
- ✓ முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் இது உருவாக்கப்பட்டது. இந்தியப் பிரதமர்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பிரிவை அர்ப்பணிக்கும் SPG சட்டத்தை 1988ஆம் ஆண்டில் நாடாளுமன்றம் நிறைவேற்றியது. 1991ஆம் ஆண்டு நிகழ்ந்த இராஜீவ் காந்தி படுகொலைக்குப்பின்னர், அனைத்து முன்னாள் பிரதமர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் குறைந்தது பத்தாண்டு காலத்திற்கு SPG பாதுகாப்பு அளிக்கும் விதமாக அச்சட்டம் திருத்தப்பட்டது.

**10. சமற்கிருத பாரதி விஸ்வ சம்மேளனம் தொடங்கப்பட்ட நகரம் எது?**

A) சிம்லா

B) புனே

**C) புது தில்லி ☑**

D) இராஞ்சி



- ✓ பண்டைய சமற்கிருத மொழியில் கருத்துக்கள், கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளைப்பற்றி விவாதிக்கும் சமற்கிருத பாரதி விஸ்வ சம்மேளனம் என்னும் நிகழ்வு புது தில்லியில் தொடங்கியது. 17 நாடுகளைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான சமற்கிருத ஆர்வலர்கள் இதில் கலந்துகொள்கின்றனர்.

- ✓ சமற்கிருத மொழி வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களை நிறுவும் மாதிரிகள் & விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தும், 'சமற்கிருதி பிரதர்ஷினி' என்னும் கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருமதி.இரம்யா ஸ்ரீகண்டன் (28), தென்னிந்திய அளவில் (இந்திய வானூர்தி நிலைய ஆணைய வானூர்தி நிலையங்கள்) முதலாவதாகவும், இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்தின் மூன்றாவது பெண் தீயணைப்பு பணியாளராகவும், சென்னை விமானநிலையத்தில் இளநிலை உதவியாளர் (விமான நிலைய தீயணைப்பு நிலையம்) பணியில் சேர்ந்துள்ளார். இவர் சென்னை விமான நிலையத்தில் பணியில் சேருவதற்கு முன்பாக, புது தில்லியில் உள்ள தீயணைப்பு பயிற்சி மையத்தில் 4 மாத கால கடும்பயிற்சியை மேற்கொண்டார்.
- ✓ சென்னை – பெங்களூரு மற்றும் சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தட திட்டங்கள் விரைவில் தொடங்கவுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. இதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கி $451 மில்லியன் மதிப்பிலான கடனுதவி வழங்கவுள்ளது.
- ✓ அண்மையில், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் காற்று மாசு அதிகரித்தது. அதன் காரணமாக, காற்றின் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றது (300–400) குறிப்பிடத்தக்கது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.நடப்பாண்டுக்கான 'ABLF குளோபல் ஆசிய விருது' வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?**



A) முகேஷ் அம்பானி

B) கௌதம் அதானி

C) அஸிம் பிரேம்ஜி

**D)** குமார் மங்கலம் பிர்லா ☑

✓ ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைவரான குமார் மங்கலம் பிர்லாவுக்கு ABLF குளோபல் ஆசிய விருது வழங்கப்பட்டுள்ளது. பன்னாட்டளவில் ஆர்வத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் ஓர் ஆற்றல்வாய்ந்த தனி நபரின் வணிகத்தடம் மற்றும் சிறந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. ஐக்கிய அரபு அமீரக அரசின் ஆதரவில் உள்ள ஆசிய வர்த்தக தலைமைத்துவ மன்றமானது (ABLF) தற்போது பேச்சுக்கள், விருதுகள் மற்றும் வெளியீடுகள் என 3 வடிவங்களில் இயங்கி வருகிறது.

**2.அண்மையில் காலமான பிரபல தேர்தல் சீர்திருத்தவாதி T N சேஷன், எத்தனை ஆண்டு காலத்திற்கு தலைமைத் தேர்தல் ஆணையராக பதவிவகித்தார்?**



**A)** 6 ☑

B) 4

C) 5

D) 7

✓ முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் திருநெல்லை நாராயண ஐயர் சேஷன் (87), நவம்பர் 10 அன்று சென்னையில் காலமானார். தேர்தல் விதிமீறல்களை கட்டுப்படுத்த எடுத்த முனைப்பான நடவடிக்கைகளால் பெரிதும் அறியப்பட்டவர். மிகக்கடுமையாக தேர்தல் ஆணைய விதிகளை அமல்படுத்தி தவறுசெய்யும் அரசியல்வாதிகளுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார்.

✓ உலகின் மிகப்பெரிய குடியரசு நாடான இந்தியாவில் மிகப்பெரிய தேர்தல் சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்து உலகையே திரும்பிப்பார்க்க வைத்தவர் எனும் நோக்கில், 1996ஆம் ஆண்டில் T N சேஷனுக்கு 'இரமோன் மகசேசே' விருது வழங்கப்பட்டது. இவர், இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையராக 1990 – 1996 வரை பதவிவகித்தார்.

**3.எந்த மத்திய துணை இராணுவப்படையை ITBPஉடன் இணைப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது?**

A) BSF

**B)** அஸ்ஸாம் ரைபிள்ஸ் ☑

C) CISF

D) SSB



✓ சமீபத்தில், அஸ்ஸாம் ரைபிள்ஸை இந்தோ–திபெத்திய எல்லை காவல்படையுடன் (ITBP) இணைக்க வேண்டும் என உள்துறை அமைச்சகம் முன்மொழிந்தது. தற்போது, அஸ்ஸாம் ரைபிள்ஸ் படையானது உள்துறை அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டிலும், இராணுவத்தின் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டிலும் (பாதுகாப்பு அமைச்சகம்) உள்ளது. நிர்வாக கட்டுப்பாடு மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின் இந்த இருமை ஒருங்கிணைப்பின் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் விதமாக உள்ளது.

**4.போர்டோ (Fordow) எரிபொருள் செறிவூட்டல் ஆலை தொடர்புடைய நாடு எது?**

**A) ஈரான் ☑**

B) ஆப்கானிஸ்தான்

C) இரஷ்யா

D) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



✓ போர்டோ என்ற இடத்தில் மலைக்கடியில் உள்ள ஆலையில் கடந்த 2015ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட யுரேனியம் செறிவூட்டும் பணியை ஈரான் மீண்டும் தொடங்கியுள்ளது. 2015இல் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தின்படி, ஐந்து சதவீத அளவுக்கு மட்டுமே யுரேனியத்தை செறிவூட்டவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

**5.தேசிய நெடுஞ்சாலை எண் 766இல் (NH 766) போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்றியுள்ள மாநில சட்டமன்றம் எது?**

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

**C) கேரளா ☑**

D) ஆந்திர பிரதேசம்




✓ வடகேரளத்தில் வாழும் மக்கள் சுதந்திரமாக பயணித்துச் செல்வதற்கான உரிமையைப் பாதுகாக்கும் விதமாக தேசிய நெடுஞ்சாலை எண் 766 மீதான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு மத்திய அரசைக்கோரி கேரள மாநில சட்டமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

✓ கேரள மாநிலம், கோழிக்கோடு முதல் கர்நாடகத்தின் கொல்லேகல் வரை தேசிய நெடுஞ்சாலை எண் 766 வழித்தடம் உள்ளது. இவ்வழித்தடத்தில், கர்நாடகத்தில் உள்ள பந்திபூர் வனவுயிரிகளுக்கான பாதுகாக்கப்பட்ட பகுதி அமைந்துள்ளது. இந்நிலையில், பந்திபூர் கானகம் வழியாக இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை வாகனங்கள் செல்வதற்கு கர்நாடக மாநில அரசு தடை விதித்துள்ளது.

**6.அண்மையில் காலமான இராமகாந்த் குண்டேச்சா, எந்தப் பாரம்பரிய ஹிந்துஸ்தானி இசை வடிவத்தில் புகழ்பெற்ற மேதையாக இருந்தார்?**

**A) துருபத் ☑** B) கியால்

C) தாரானா D) கசல்



✓ 'பத்மஸ்ரீ' விருது பெற்ற துருபத் இசைக்கலை மேதையான் இராமகாந்த் குண்டேச்சா (56), நவம்பர் 8 அன்று மத்தியப்பிரதேச தலைநகர் போபாலில் காலமானார்.

**7. சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அரை சதம் அடித்த இளம் இந்திய கிரிக்கெட்டாளரான சபாலி வர்மா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

**A) ஹரியானா ☑**

B) ஒடிசா

C) உத்தரபிரதேசம்

D) இராஜஸ்தான்



✓ சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 15 ஆண்டுகள் மற்றும் 285 நாட்களில் அரைசதம் அடித்த இளம் இந்திய கிரிக்கெட்டாளர் என்றபெருமையை வீராங்கனை சபாலி வர்மா பெற்றுள்ளார். இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான முதலாவது T20 சர்வதேச போட்டியின்போது அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். அவர் தனது இந்தச் சாதனையின் மூலம் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் 30 வயது சாதனையை முறியடித்துள்ளார்.

**8. உலக பொருளாதார மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டுக்கூட்டம் நடைபெறவுள்ள நகரம் எது?**

A) புது தில்லி

B) பாரிஸ்

**C) தாவோஸ் ☑**

D) நியூயார்க்




✓ உலக பொருளாதார மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு கூட்டம், வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரியில் சுவிச்சர்லாந்தில் உள்ள தாவோஸில் நடைபெறவுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய தலைமை நிர்வாக அதிகாரிகள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஹிந்தித் திரையுலகைச் சேர்ந்த பல்வேறு நடிகர்கள் இதில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ ஆண்டுதோறும் நடைபெறும் உலகெங்கிலும் உள்ள செல்வந்தர்கள் மற்றும் ஆற்றல்வாய்ந்தவர்களின் இக்கூட்டம் இம்முறை இன்னும் மிக பிரம்மாண்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் இது அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவாகும்.

**9. எந்தக் கருப்பொருளின்கீழ், நடப்பாண்டுக்கான (2019) BRICS உச்சிமாநாட்டை பிரேசில் நடத்துகிறது?**

A) BRICS: 4th Industrial Revolution

**B) BRICS: Economic Growth for an Innovative Future ☑**

C) BRICS: Unite for Climate Awareness

D) BRICS: Nature & Future

✓ 11ஆவது BRICS உச்சிமாநாட்டை பிரேசில் அதன் தலைநகரமான பிரேசிலியாவில் நவம்பர் 13 முதல் 14 வரை "BRICS: Economic Growth for an Innovative Future"என்ற கருப்பொருளில் நடத்துகிறது. **BRICS** நாடுகள் – பிரேசில் (**B**), இரஷ்யா (**R**), இந்தியா (**I**), சீனா (**C**) மற்றும் தென்னாப்பிரிக்கா (**S**) – உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23% பங்கையும் உலக வணிகத்தில் 17% பங்கையும் கொண்டுள்ளது.

**10. நடப்பாண்டில் (2019) வரும் சர்வதேச கதிரியல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Cardiac Imaging

**B) Sports Imaging ☑**

C) Emergency Imaging

D) Brain Imaging



✓ சர்வதேச கதிரியல் நாள் (International Day of Radiology) என்பது நவீன மருத்துவத் துறையில் மருத்துவப் படிமவியலின் சிறப்பினை எடுத்துக்கூறுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படும் ஒரு சிறப்புநாளாகும். X–கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட நவ.8 அன்று இந்த நாள் கொண்டாடப்படுகிறது. கதிரியலுக்கான ஐரோப்பிய கழகம் மற்றும் கதிரியலுக்கான அமெரிக்கக்கல்லூரி ஆகியன இணைந்து 2012ஆம் ஆண்டு முதன்முதலாக இந்நாளை கொண்டாடின. "Sports Imaging" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. உலகின் முதல் CNG துறைமுக முனையம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இந்திய நகரம் எது?**

**A) பாவ்நகர் ☑**

B) சென்னை

C) புனே

D) டேராடூன்



- ✓ பாவ்நகர் துறைமுகத்தில் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) முனையத்தை அமைப்பதற்கான ஒப்புதலை குஜராத் மாநில அரசு அளித்துள்ளது. இது உலகின் முதல் CNG துறைமுக முனையமாகும். இதற்கான ஒப்புதலை குஜராத் முதல்வர் விஜய் ரூபானி தலைமையிலான குஜராத் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் வழங்கியுள்ளது. இம்முனையத்தை போர்சைட் குழுமமும் மும்பையைச் சேர்ந்த பத்மநாப் மபத்லால் குழுமமும் இணைந்து கட்டவுள்ளன.
- ✓ இவ்விரு நிறுவனங்களும் இணைந்து ₹1,900 கோடியை முதலீடு செய்யும்; அதில் ₹1,300 கோடி முதல் கட்டத்திலும், ₹600 கோடி கட்டுமானத்தின் இரண்டாவது கட்டத்திலும் முதலீடு செய்யப்படும்.


**2. இந்தியாவில் எந்தத் தேதியில், பொது சேவை ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படுகிறது?**

**A) நவம்பர் 12 ☑**

B) நவம்பர் 14

C) நவம்பர் 13

D) நவம்பர் 10



- ✓ 1947 நவம்பர் 12 அன்று தில்லியிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு வருகைதந்து, பிரிவினைக்குப்பின் ஹரியானாவின் குருக்ஷேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறியவர்கள்பற்றி உரையாற்றிய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் நினைவாக, ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 12 அன்று பொது சேவை ஒலிபரப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, தில்லியிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**3. சுந்தர் சிங் குர்ஜார் என்பவர் எப்பிரிவைச் சார்ந்த இந்திய பாராலிம்பிக் ஈட்டியெறி வீரராவார்?**

A) F57

B) F45

**C) F46 ☑**

D) F48



- ✓ துபாயில் நடந்துவரும் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான F46 ஈட்டியெறிதலில் இந்தியாவின் சுந்தர் சிங் குர்ஜார் 61.22 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து தங்கப்பதக்கத்தை தக்கவைத்துக் கொண்டார். அதே பிரிவில் இந்திய வீரர்களான அஜீத் சிங் 59.46 மீ., தூரம் ஈட்டியெறிந்து வெண்கலம் வென்றார். மற்றொரு இந்திய வீரரான ரிங்கு நான்காவது இடம்பிடித்தார்.
- ✓ சர்வதேச பாராலிம்பிக் விதிகளின்படி, உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் ஒவ்வொரு தனிநபர் பதக்கப்பிரிவில் நடைபெறும் போட்டியில் முதல் 4 இடங்களை பெறுபவர்கள் பாராலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதிபெற முடியும். இதனடிப்படையில் தற்போது சுந்தர் சிங் குர்ஜார், அஜீத் சிங், ரிங்கு ஆகியோர் அடுத்த ஆண்டு (2020) ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் நடைபெறவுள்ள பாராலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**4. ஆடவர் T20 போட்டியில் ஹாட்ரிக் எடுத்த முதல் இந்திய பந்துவீச்சாளர் யார்?**

A) R அஸ்வின்

B) ஜஸ்பிரித் பும்ரா

**C) தீபக் சாகர் ☑**

D) முகமது சிராஜ்



- ✓ நாக்பூரில் உள்ள விதர்பா கிரிக்கெட் சங்கத்தின் அரங்கில் வங்கதேசத்துக்கு எதிரான 3.2 ஓவர்களில் ஏழு இரன்களுக்கு ஆறு விக்கெட்டுகளை எடுத்து, இந்திய வேகப்பந்து வீச்சாளர் தீபக் சாகர் T20 சர்வதேச போட்டிகளில் மிகச்சிறந்த புள்ளிவிவரங்களை பதிவுசெய்தார். 2012இல் ஜிம்பாப்வேக்கு எதிராக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்தா மெண்டிஸ் 8 இரன்களுக்கு 6 விக்கெட்டுகள் எடுத்தார்.
- ✓ தொடர்ச்சியாக 3 பந்துகளில் ஷபியுல் இஸ்லாம், முஸ்தாபிஸூர் இரஹ்மான் மற்றும் அமினுல் இஸ்லாம் ஆகியோரின் விக்கெட்டுகளைக் கைப்பற்றி வங்கதேச இன்னிங்ஸை வாரி சுருட்டி, விளையாட்டின் குறுகிய வடிவத்தில் ஹாட்ரிக் எடுத்த முதல் இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் தீபக் சாகர் பெற்றார்.

**5. நடப்பாண்டில் (2019) வரும் அமைதி & வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளின் கருப்பொருள் என்ன?**

A) Science, a Human Right

B) Science for Global Understanding

C) Celebrating Science Centres and Science Museums

**D) Open Science, Leaving No One Behind ☑**




- ✓ பொது மக்களிடையே அறிவியலின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.10 அன்று உலக அமைதி & வளர்ச்சிக்கான அறிவியல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தையும் இந்நாள் சிறப்பித்துக்கூறுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Open Science, Leaving No One Behind" என்பதாகும்.

**6.குஜெஸ்தானில் 53 பில்லியன் பீப்பாய்கள் இருப்பு கொண்டுள்ள புதிய எண்ணெய் வயலை கண்டுபிடித்துள்ள நாடு எது?**

A) சவுதி அரேபியா

**B) ஈரான் ☑**

C) துர்க்மெனிஸ்தான்

D) உஸ்பெகிஸ்தான்




✓ ஈரானின் தென்மேற்கு பகுதியில் உள்ள குஜெஸ்தான் மாகாணத்தில் 2400 ச.கிமீ பரப்பளவில், சுமார் 53 பில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெய் இருப்பைக்கொண்டுள்ள புதிய எண்ணெய் வயல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 80 மீட்டர் ஆழத்தில் அங்கு கச்சா எண்ணெய் சுரக்கிறது. பெட்ரோல், டீசல் உற்பத்திக்கு தேவையான கச்சா எண்ணெய் வளங்கொண்ட நாடுகளின் பட்டியலில் ஈரான் நான்காவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

**7.பிளியோசார்கள் (Pliosaurs), எந்த புவியியல் காலத்தைச் சேர்ந்தவையாக அறியப்படுகின்றன?**

A) பிளீஸ்டோசீன்

B) ஒலிகோசீன்

**C) ஜுராசிக் (Jurassic) ☑**

D) கார்போனிஃபெரஸ்



✓ அண்மையில், போலந்து நாட்டில் பிளியோசார்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடல்களில் வாழ்ந்த வேட்டையாடும் ஊர்வனங்கள்தான் பிளியோசார்கள். இதுவரை வாழ்ந்த மிகப்பெரிய நீர்வாழ் மாமிச உண்ணி ஊர்வனவற்றில் இவைதான் மிகப்பெரியது. பொதுவாக, 'கடல் அரக்கர்கள்' என்று குறிப்பிடப்படும் இவை மிகப்பெரிய மண்டையோடுகளையும் பெரிய கூர்மையான பற்களைக்கொண்ட பெரும்தாடைகளையும் கொண்டிருந்தன.

**8.ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய வனவுயிரியலாளர் யார்?**

A) லத்திகா நாத்

B) பிஜு தாஸ்

C) பூர்ணிமா சர்மா

**D) K உல்லாஸ் கரந்த் ☑**



✓ பெங்களூருவில் அமைந்துள்ள வனவிலங்கு ஆய்வுகள் மையத்தின் இயக்குநரான வனவுயிரியலாளர் K உல்லாஸ் கரந்த் அவர்கட்கு, வனவிலங்கு பாதுகாப்பு அறிவியலில் ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது வழங்கப்பட்டுள்ளது. உலகளவில் மிகச்சிறந்த வனவுயிரி அறிவியலாளர்கள் மற்றும் பாதுகாவலர்களில் ஒருவராகக் கருதப்படும் Dr. ஜார்ஜ் ஷாலரின் நினைவாக நியூயார்க்கின் வனவுயிரி பாதுகாப்பு சங்கம் இவ்விருதை நிறுவியுள்ளது.

✓ இவ்விருது, வனவுயிரிகளையும் வனப்பகுதிகளையும் பாதுகாப்பதில் சிறப்பான பங்களிப்பைச் செய்யும் வனவுயிரி பாதுகாப்பு சங்கத்தின் உறுப்பினர்களை கௌரவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

**9. இந்திய மகளிர் U-17 அணியின் இந்திய தலைமைப் பயிற்சியாளராக பொறுப்பேற்ற தாமஸ் டென்னர்பி, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) டென்மார்க்

B) போர்ச்சுகல்

**C) சுவீடன் ☑**

D) ஸ்பெயின்



✓ வரும் 2020ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோர் FIFA மகளிர் உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் தலைமைப்பயிற்சியாளராக சுவீடனின் தாமஸ் டென்னர்பி நியமிக்கப்பட்டுள்ளார். 30 ஆண்டுகள் பயிற்சி அனுபவம்வாய்ந்த இவரது பயிற்சியில் சுவீடன் தேசிய பெண்கள் அணி 2011 FIFA உலகக்கோப்பையில் மூன்றாவது இடத்தைப்பெற்றது.

**10. நடப்பாண்டில் (2019) வரும் உலக நிமோனியா நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**A) Healthy Lungs for All ☑**

B) Every Breath Counts: Stop Pneumonia Now

C) Innovate to End Child Pneumonia

D) Universal Access to Pneumonia Prevention and Care

world pneumonia day

✓ பொதுநலவாழ்வு பிரச்சனையான நுரையீரல் அழற்சியின் தீவிரத்தன்மையை எடுத்துரைக்கவும், மேலும் அந்நோயை எதிர்த்துப்போராடுவதற்கு அமைப்புகள் & நாடுகளை ஊக்கப்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் நவ.12 அன்று உலக நுரையீரல் அழற்சி நாள் (Pneumonia Day) கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு முக்கியக்காரணமாக இருக்கும் நுரையீரல் அழற்சி நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நுரையீரல் அழற்சியிலிருந்து காப்பதும், அதைத்தடுப்பதும், அதற்குண்டான சிகிச்சைகளை ஊக்குவிப்பதும், அந்நோய்க்கெதிரான செயல்பாடுகளை உருவாக்குவ–துமே இந்நாளின் நோக்கமாகும். "Healthy Lungs for All" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ திருவாரூர் மாவட்டம், குடவாசல் அருகேயுள்ள பருத்தியூரில், 'CREATE' நமது நெல்லைக்காப்போம் இயக்கத்தின் சார்பில், "நெல் ஜெயராமன் இயற்கை வேளாண்மை மற்றும் பாரம்பரிய நெல் ஆராய்ச்சி மையம்" திறக்கப்பட்டுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.விண்வெளியில் மிகப்பெரிய X–கதிர் வெடிப்பை கண்டறிந்துள்ள விண்வெளி நிறுவனம் எது?**

A) NASA ☑

B) ISRO

C) JAXA

D) Roscosmos



✓ NASAஇன் NICER (Neutron star Interior Composition Explorer) தொலைநோக்கியானது X–கதிர்களின் திடீர் வெடிப்பைக் கண்டறிந்துள்ளது. ஒரு பல்சரின் மேற்பரப்பில், ஒரு பெரிய தெர்மோ நியூக்ளியர் ஒளி காரணமாக இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது. பல்சர் என்பது ஒரு நியூட்ரான் விண்மீனாகும். இந்த X–கதிர் வெடிப்பு, 'J1808' என்ற வான் பொருளிலிருந்து வெளிவந்துள்ளது.

✓ இந்த வெடிப்பு, 10 நாட்களில் சூரியனால் வெளியாகும் ஆற்றலை 20 விநாடிகளில் வெளியிடுகிறது. பிற வான் பொருட்களைப்போலவே, சூரியனும் X–கதிர்களை வெளியிடுகிறது. எனவே, இவை குறித்து ஆராய்வது, சூரியனின் எதிர்காலத்தைப்பற்றி அறிய உதவும்.

**2.முற்றிலும் மின்னாற்றலில் இயங்கும் சோதனை விமானமான "X–57 Maxwell"ஐ அறிமுகப்படுத்தியுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

A) NASA ☑

B) ISRO

C) JAXA

D) LAPAN



✓ NASA தனது முதல் முற்றிலும் மின்னாற்றலில் இயங்கும் சோதனை விமானத்தை X–57 "Maxwell" என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தாலிய டெக்னம் (Tecnam) P2006T விமானத்தைத்தழுவி உருவாக்கப்பட்ட இது, NASAஇன் முதல் குழு X–விமானம் (சோதனை விமானம்) ஆகும்.

✓ இவ்விமானத்தின் முதல் தயாரிப்பு, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள எம்பிரிகல் சிஸ்டம்ஸ் ஏரோஸ்பேஸ் (ESAero) நிறுவனத்துக்கு கொடுக்கப்படுகிறது. இந்த விமானம் 2020இன் பிற்பகுதியில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.மொரிசியஸின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளவர் யார்?**

A) நவின் இராம்கூலம்

B) நந்தோ போதா

C) அமீனா குரிப்

D) பிரவிந்த் ஜக்நாத் ☑



✓ மொரிசியஸின் தற்போதைய பிரதமரான பிரவிந்த் ஜக்நாத், நடந்து முடிந்த தேர்தல்களுக்குப்பிறகு ஐந்தாண்டு காலத்திற்கு மொரிசியஸின் பிரதமராக பதவியேற்றுக்கொண்டார். 1968ஆம் ஆண்டில் பிரிட்டனிடமிருந்து விடுதலை அடைந்ததிலிருந்து, மொரிசியஸ், ஆப்பிரிக்காவின் மிகவும் நிலையான மக்களாட்சி வாய்க்கப்பெற்ற நாடுகளுள் ஒன்றாக உள்ளது.

**4.மகாராஷ்டிராவில் எத்தனை முறை குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது?**

A) 6

B) 4

**C)** 3 ☑

D) 5



✓ மகாராஷ்டிராவில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தும் பேரறிவிப்பில் இந்திய குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்டார், அம்மாநிலத்தில் அரசியலமைப்பின் 356ஆவது பிரிவை அமல்படுத்துவதற்கான ஆளுநரின் அறிக்கையைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் ஆட்சியை மத்திய அமைச்சரவை பரிந்துரைத்தது.

✓ அரசியலமைப்பின் பிரிவு 356 என்பது பொதுவாக, 'குடியரசுத்தலைவர் ஆட்சி' என அழைக்கப்படுகிறது. இது, மாநிலத்தில், 'அரசியலமைப்பு எந்திரங்களின் தோல்வி' குறித்தது. தற்போதைய மகாராஷ்டிர மாநிலம், 1960ஆம் ஆண்டு மே 1 அன்று உருவாக்கப்பட்டது. இம்மாநிலத்தில் குடியரசுத்தலைவராட்சி அமல்படுத்தப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

**5.ஏழாவது வடகிழக்கு விழா நடைபெற்ற நகரம் எது?**

A) இலக்னோ

B) இலடாக்

C) கௌஹாத்தி

**D)** புது தில்லி ☑




✓ ஏழாவது வடகிழக்கு விழாவை புது தில்லி நகரம் நடத்தியுள்ளது. இந்த விழா, நவம்பர் 11 அன்று இந்திரா காந்தி தேசிய கலை மையத்தில் நடந்தது. தொழில்முனைவு மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதும் இந்தியாவின் வடகிழக்கு மண்டலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே மூன்று நாள் நடந்த இந்த விழாவின் நோக்கமாகும்.

**6.யானைகளுக்கான இந்தியாவின் முதல் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ள நகரம் எது?**

A) ஆக்ரா

**B)** மதுரா ☑

C) கான்பூர்

D) இலக்னோ



✓ கடத்தல் மற்றும் துன்புறுத்தலின் காரணமாக மரணித்த யானைகளை கௌரவிக்கும் விதமாக யானைகளுக்கான இந்தியாவின் முதல் நினைவிடமானது உத்தரபிரதேச மாநிலத்தின் மதுராவில் அமைக்கப்பட்டுள்ளது. மனிதர்களின் மிருகத்தனத்தால் தங்களது இன்னுயிரை இழந்த யானைகளின் தியாகத்தை இந்த நினைவிடம் போற்றும்.

### 7. எந்தத் தேதியில், தேசிய சட்ட சேவைகள் தினம் கொண்டாடப்படுகிறது?



A) நவம்பர் 11

B) நவம்பர் 10

**C) நவம்பர் 9 ☑**

D) நவம்பர் 8

✓ ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைப்பதில் சம வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதன் அடிப்படையில் "சட்ட சேவைகள் ஆணையச் சட்டம்–1987" ஆனது கடந்த 09.11.1995 அன்று நடைமுறைக்கு வந்தது. அவ்வாறு நடைமுறைக்கு வந்த நாளான நவ.9, ஒவ்வோர் ஆண்டும் தேசிய சட்ட சேவைகள் நாளாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

✓ 'அனைவருக்கும் நீதி' என்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 39A வலியுறுத்துகிறது. நியாயமான வழக்குகளை விரைவாக முடித்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே இதன் நோக்கம். இளவயதில் மாணவர்கள் & குழந்தைகள் அரசியலமைப்பு உரிமைகள் & அதுதொடர்பான சட்டங்களை அறிந்துகொள்ள இந்நாளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### 8. "ஸ்வச்–நிர்மல் தத் அபியான்" என்றவொன்றை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?



A) ஜல் சக்தி அமைச்சகம்

B) கால்நடை பராமரிப்பு, பால்வளம் & மீன்வளத்துறை அமைச்சகம்

**C) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம் ☑**

D) வேளாண்மை & உழவர்நல அமைச்சகம்

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது நவம்பர் 11–17 வரை "ஸ்வச்–நிர்மல் தத் அபியான்" என்ற திட்டத்தின்கீழ் அடையாளங்காணப்பட்ட 50 கடற்கரைகளில் தூய்மை – விழிப்புணர்வு இயக்கத்தை மேற்கொள்ளவுள்ளது.

✓ நாடு முழுவதுமுள்ள கடற்கரையோரப் பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க முயற்சிப்பதும், கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், கடல்வாழ் உயிரினங்களை நெகிழிக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் பிற தீங்குவிளைவிக்கும் பொருட்களிலிருந்து காப்பாற்றுவதுமே இதன் நோக்கமாகும்.

**9.உறுப்பு தானத்தை ஊக்குவிப்பதற்காக 'சூரஜ்' விருதை வழங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) மத்திய பிரதேசம்

B) குஜராத்

C) இராஜஸ்தான்

**D) ஒடிசா ☑**



✓ உறுப்பு தானத்தை ஊக்குவிப்பதற்காக ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் 'சூரஜ்' பெயரில் ஆண்டு தொறும் வழங்கப்படவுள்ள ஒரு விருதை அறிவித்துள்ளார். சூரத்தில் பணிபுரிந்து கஞ்சம் மாவட்டத்தில் வசித்து வந்த சூரஜ், அக்.29 அன்று ஒரு பயங்கர சாலை விபத்தில் சிக்கினார். நவ.2 அன்று அவருக்கு மூளை இறப்பு ஏற்பட்டதாக மருத்துவர்கள் அறிவித்த பிறகு அவரது பெற்றோர் மற்றவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவரது உறுப்புகளை தானம் செய்ய முடிவுசெய்தனர்.

**10.குழந்தைகள் உரிமை மீறல்களைப் புகாரளிப்பதற்காக சிசு சுரக்ஷா செயலியைத் தொடங்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) நாகாலாந்து

**B) அஸ்ஸாம் ☑**

C) திரிபுரா

D) கர்நாடகா



✓ நவ.14 – குழந்தைகள் நாளை முன்னிட்டு, குழந்தைகள் உரிமை மீறல்கள் குறித்து புகாரளிப்பதற்காக 'சிசு சுரக்ஷா' என்ற அலைபேசி செயலியை அஸ்ஸாம் குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் (ASCPCR) அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் இந்தியாவின் நோக்கத்தை மனதில் கொண்டு, இதனை உருவாக்க ASCPCR முடிவுசெய்தது. எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்க குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதே இந்தச் செயலியின் நோக்கமாகும்.